
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1019**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

**35**

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# இராயப்பேட்டையில் நிறுவப்பட்ட பெரியார் சிலை!

*எண் 61, வெங்கடாசலம் தெரு, ராயப்பேட்டை என்ற முகவரி கொண்ட ஒற்றைக் குடித்தன வாடகை வீடு, ஒரு உடைந்த நாற்காலி, ஓலைப்பாய், மர பீரோ... பத்ரி நாராயணனுக்கு வசதிகளும் வாய்ப்புகளும் அதற்குமேல் இல்லை. ஆனால், அவருடைய கண்ணசைவுக்கே கட்டுப்படும் நூற்றுக்கணக்கான இளைஞர்களை 1990-இல் உருவாக்கி வைத்திருந்தார் அவர். 1980-களில் திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, பத்தாண்டுகளிலேயே பலமான கோட்டையாக ராயப்பேட்டையை மாற்றிய செயல் வீரர்.*

*ராஜீவ் காந்தி படுகொலையில் கைதாகி, 30 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த எழுவரை, விடுவிக்கக்கோரி அமைச்சரவையில் தீர்மானம் இயற்றி, உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டி சட்டப்போராட்டம் நடத்தி வெற்றி கண்டது இன்றைய திராவிட மாடல் அரசு. ஆனால், படுகொலை நடந்த காலகட்டம் என்பது மிகவும் கொந்தளிப்பானது. பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் முதலில் 26 பேருக்கு தூக்குத்தண்டனை வழங்கியது. அந்த கொந்தளிப்பான காலகட்டத்திலேயே மரண தண்டனைக்கு எதிராக இயக்கம், ராயப்பேட்டையில் மரண தண்டனை எதிர்ப்பு மாநாடு, ஒரு லட்சம் ரூபாய் வழக்கு நிதி வசூல், டெல்லிவரை சென்று சட்டப் போராட்டம் என துணிச்சலுடன் செயல் பட்டவர் பத்ரி. அதன் விளைவாக, 19 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.*



*கிளைக்கழகங்கள் உருவாக்குவது, பெயர்ப்பலகை திறப்பது, பிரச்சாரங்களில் ஈடுபடுவது என எப்போதும் பரபரப்பாகக் காணப்பட்ட பத்ரி, 1993-ஆம் ஆண்டில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணியை அழைத்துவந்து, வி.எம்.தெருவில் பெரியார் சிலை ஒன்றை நிறுவினார். அந்த பெரியார் சிலைதான் கருப்புச்சட்டைகள் கூடுமிடம். பெரியார் சிலைக்கு அருகிலேயே பிரபலமான நாகாத்தம்மன் கோயிலும் இருக்கிறது. ஆனால் பொதுமக்கள் பிரச்னை என்றால் கோயிலுக்குச் செல்வதை விட, பெரியார் சிலைக்கு அருகே இருக்கும் பத்ரி நாராயணனிடம் செல்வதுதான் வழக்கமாக இருந்தது. பெரியார் சிலையால் பக்தியும் பாதிக்கப்பட்டதில்லை, கோயிலால் பகுத்தறிவுப் பிரச்சாரமும் தடைபட்டதில்லை.*



*திராவிடர் கழக இளைஞர் அணியின் சார்பில் பனகல் பூங்காவில், சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் பங்கேற்ற மாநாட்டின் பின்னணியில் இருந்து கடுமையாக உழைத்ததுடன், பெரும் எண்ணிக்கையில் இளைஞர்களைப் பங்கேற்கச் செய்தார். 1996-இல் பத்ரி நாராயணன் திராவிடர் கழகத்தில் இருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்களுடன் விலகி, விடுதலை இராசேந்திரனோடு இணைந்து பெரியார் திராவிடர் கழகமாகச் செயல்படத் தொடங்கினார். பத்ரி நாராயணனின் வாடகை வீடுதான் பெரியார் திராவிடர் கழகத்தின் முதல் தலைமையகம்.*

*சென்னை ஐ.ஐ.டி-யின் தலித் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து பெரும் இயக்கத்தை முன்னெடுத்தார். தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் இப்பிரச்சினையில் தலையிடும் அளவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது அந்தப் போராட்டம். 2001-இல் பேராசிரியர் மு.இராமசாமியின் 'கலகக்காரர் பெரியார்' நாடகத்தை, காமராசர் அரங்கு நிரம்ப நடத்தினார். வள்ளுவர் கோட்டத்தில் சாதி ஒழிப்பு மாநாட்டை நடத்தினார். சுயசாதி எதிர்ப்பு, சாதி மறுப்பு- சுயமரியாதைத் திருமணங்களை முன் நின்று நடத்தி வைத்தல், மத நல்லிணக்கம் என தீவிரமாகச் செயல்படலானார் பத்ரி.*

**...பயணிப்போம்.**

## அறிவுப் பாரம்பரியத்தைத் தொடரும் இளைஞர் அணி!

**க**ழகத்தின் பவள விழா நிறைவையொட்டி, இளைஞர் அணி சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்று வரும் அறிவுத் திருவிழா மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்தகைய புதுமையான மாற்றுக் கொண்டாட்டங்கள், பகுத்தறிவுச் சிந்தனையை வளர்க்கும் முயற்சிகள் ஏராளம் நடைபெற வேண்டும் என தலையங்கம் தீட்டியுள்ளது, 'புரட்சிப் பெரியார் முழக்கம் வார ஏடு'.

அதில், "அறிவுத் திருவிழாவின் பேரால், ஒரு புதிய கொண்டாட்டத்தை தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி. முற்போக்கு புத்தகக் காட்சியில் திராவிட இயக்க நூல்கள் என்ற அளவில் மட்டும் சுருக்கி விடாமல், அம்பேத்கரிய – மார்க்சிய பதிப்பாளர்கள், விற்பனையாளர்களையும் அழைத்து, எல்லோரையும் உள்ளடக்கிய விழாவாக நடத்தப்பட்டிருக்கிறது. உலக அரசியல் எல்லாவற்றையும் தங்கள் தொண்டர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சர்வதேச ஏடுகளையும் நூல்களையும் புரட்டிப் பார்த்து, அவற்றை 'குடிஅரசு', 'விடுதலை', 'திராவிட நாடு' ஏடுகளில் வழங்கியவர்கள் பெரியாரும், அண்ணாவும். அத்தகைய அறிவுப் பாரம்பரியத்தை இந்த முற்போக்கு புத்தகக் காட்சியின் மூலம் மீட்டுருவாக்கம் செய்திருக்கிறார் உதயநிதி.

திராவிட இயக்கத்தின் அடிப்படை இலட்சியங்களில் எம்.ஜி.ஆர். காலமும், ஜெயலலிதா காலமும் எண்ணிலடங்கா ஓட்டைகளை ஏற்படுத்திவிட்டன. இந்த நிலை இப்படியே நீடிக்காமல், அவற்றைச் சரிசெய்து மீண்டும் இளைய தலைமுறை கொள்கைப் பாய்ச்சலோடு, திராவிட அரசியலுக்குள் நுழைய வேண்டும் என்ற ஆழமான இலட்சியப் பார்வை உதயநிதி ஸ்டாலினுக்கு இருக்கிறது. அதன் வெளிப்பாடாகத்தான் அவருடைய கொள்கை சார்ந்த இத்தகைய தொடர் முன்னெடுப்புகளைப் பார்க்கிறோம். தி.மு.க. ஒரு சரசாரி அரசியல் கட்சியல்ல, அதைத் தாண்டிய சமூகச் சீர்திருத்த இலக்கு தங்களுக்கு இருக்கிறது என்பதை மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்தியிருக்கிறது.

தி.மு.க.வை நோக்கி வருகிற இளைஞர்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு இளைஞர்களையும் இந்த முற்போக்குக் கருத்தியலை நோக்கி ஈர்க்க வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது. அந்தப் பணிக்கு முகவரி தரும் முயற்சியாக இந்த அறிவுத் திருவிழா நிச்சயம் அமையும். உதயநிதிக்கும் தி.மு.க. இளைஞர் அணிக்கும் நமது பாராட்டுகள்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

**85**

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

# எஸ்.ஐ.ஆருக்கு எதிரான சட்டப்போராட்டம்!




***க**ள்ள ஓட்டு போட முடியாது என்பதால், எஸ்.ஐ.ஆர். எனப்படும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை, தி.மு.க. எதிர்க்கிறது என்று எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டுகிறாரே?***

*பாவம்... அவருக்கு கம்பராமாயணத்தை எழுதியவர் யார் என்பதுகூட சரியாகத் தெரியாது. தேர்தல் ஆணையத்தின் விதிகள், வாக்காளர் பட்டியல் சீர்திருத்த நடைமுறைகள் போன்ற சட்டப்பூர்வமான அம்சங்களைக் கேட்டால், எடப்பாடி பழனிசாமி என்ன செய்வார்? 'இதற்கு முன்பு கூட 8 முறை எஸ்.ஐ.ஆர். நடைபெற்றுள்ளது' என்கிறார் பழனிசாமி. அவரும்தானே ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களித்து வருகிறார்? எப்போதாவது இதுபோல தேர்தலுக்கு 6 மாதங்களுக்கு முன்பாக, வாக்காளர் பட்டியல் முழுவதுமாக முடக்கப்பட்டு, அனைத்து வாக்காளர்களும் படிவத்தை நிரப்பிக் கொடுத்து, புதுப்பித்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்களா? பதில் சொல்வாரா பழனிசாமி?*

*முந்தைய சிறப்புத் திருத்தம் தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில் 2002-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது எந்தத் தேர்தலும் நடைபெறாத ஆண்டு. சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், 2001-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் முடிந்தபிறகு, ஓராண்டு கழித்து, இந்த சிறப்புத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சென்னை உள்ளிட்ட நகரங்களில், 2006-ஆம் ஆண்டு தேர்தலுக்கு ஓராண்டு முன்பாக, திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 2005-ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுவிட்டது. ஆனால், இந்த முறை தமிழ்நாடு உள்பட இன்னும் 6 மாத காலத்தில் தேர்தல் நடக்கவிருக்கும் மாநிலங்களில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை மேற்கொள்வதற்கான அவசியமென்ன? தேர்தல் நடந்து முடிந்துள்ள பீஹார் மாநிலத்தின் வாக்காளர் பட்டியலில் சிறப்புத் திருத்தம் என்ற பெயரில், 65 இலட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்ட நிலையில்தான், பா.ஜ.க.வின் கைப்பாவையாகச் செயல்படும் தலைமைத் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள் மீது நாடு தழுவிய அளவில் சந்தேகம் எழுந்துள்ளது. தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளன.*

*தேர்தல் ஆணையத்தின் எஸ்.ஐ.ஆர். பணிகளுக்கு பா.ஜ.க.வைவிட, அதிகமாக வக்காலத்து வாங்கும் எடப்பாடி பழனிசாமியின் எஜமான விசுவாசம் ஆச்சரியப்பட வைக்கிறது. எஸ்.ஐ.ஆர். வேண்டும் என்று பா.ஜ.க.கூட இதுவரை வழக்குத் தொடரவில்லை. பீஹாரில் பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சியான ஐக்கிய ஜனதாதளம் கட்சி கூட எஸ்.ஐ.ஆர். கேட்டு வழக்குத் தொடரவில்லை. ஆனால், தி.மு.க.வை எதிர்க்க வேண்டும் என்பதற்காக எஸ்.ஐ.ஆர். வேண்டும் என்று மனு தாக்கல் செய்திருக்கும் இந்தியாவின் ஒரே கட்சி எடப்பாடி பழனிசாமியின் அ.தி.மு.க.தான்.*

*புதிய வாக்காளர்களைச் சேர்க்க வேண்டும், இறந்த வாக்காளர்களை நீக்க வேண்டும் என்பதை தி.மு.க. கடந்த 2019-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தேர்தல் ஆணையத்திடம் வலியுறுத்தி வருகிறது. இதனைக் கண்டுகொள்ளாத கட்சி, அ.தி.மு.க.தான். ஜெயலலிதா போட்டியிட்ட ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் முதல், பலவற்றிலும் இறந்தவர்களின் வாக்குகளையும், வாக்குச்சாவடியில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையைவிட கூடுதலாகவும் வாக்குப்பதிவு செய்த தில்லாலங்கடிகளுக்கு தி.மு.க.வை குற்றம்சாட்ட என்ன தகுதியுள்ளது?*

*தி.மு.க. தலைவரான தமிழ்நாட்டின் முதலமைச்சர் எஸ்.ஐ.ஆருக்கு எதிராக நடத்தும் சட்டப்போராட்டம் என்பது அதிமுக உள்ளிட்ட அனைத்துத் தரப்பு வாக்காளர்களின் ஜனநாயக உரிமைக்கானது. எடப்பாடி பழனிசாமி பேசுவதும் செய்வதும், தன்னை பா.ஜ.க.வின் அடிமை என்பதை நிரூபிப்பதற்கானது.*

**...வினா தொடரும்.**

## ஃப்ளாஷ்பேக்



கலைச்செல்வி



### தொண்டர் இல்லங்களில் தலைவர் தளபதி!

1988-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணி நிகழ்ச்சிகளுக்காக, ஈரோடு வருகை தந்திருந்தார். காளிங்கராயன்பாளையத்தில் கழகத் தொண்டர் இல்லம் ஒன்றில், தலைவரைச் சந்தித்து மகிழ்ந்த போது எடுத்த படம்.

**– கலைச்செல்வி,**
**மகளிர் அணி துணைத் தலைவி, ஈரோடு தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மாவட்ட மாநாட்டில் 40 தீர்மானங்கள்!

1958-ஆம் ஆண்டு ஜூலை 5-ஆம் தேதி, கோவை மாவட்ட தி.மு.க.வின் மூன்றாவது மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டுத் தீர்மானங்களில், கோவை, திருப்பூர் பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்சினைகள், கோவை மாவட்ட பாசனக் கால்வாய்களை மேம்படுத்துவது குறித்து, விரிவாக முன்மொழியப்பட்டன. 40 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131